**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான**

**தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-04

# வினாத்தாள் - I

சுட்டெண்:- ....................................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - ✱ **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - ✱ **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**


---



(01) முதலில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.


**பாடசாலை - நேரம் - ஒலி**

(1)  (2)  (3) 

(02) முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பெரிய முக்கோணமொன்றாகப் பூர்த்திச் செய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1)  (2)  (3) 

(03) 

இவ்வுருவில் எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கு ஏற்ப A, B ஆகிய வெற்று வட்டங்களில் இடப்பட வேண்டிய எண்கள் முறையே,

(1) A = 8 , B = 3 (2) A = 6 , B = 2 (3) A = 4 , B = 1

(04) தரப்பட்டுள்ள உருவில் ? குறியினால் காட்டப்படும் நிரலில் இருக்க வேண்டிய குறியீட்டுக் கூட்டம்,


| | | | |
|---|---|---|---|
| △ | ○ | □ | ? |
| ✱ | □ | ○ | |
| □ | △ | ✱ | |
| ○ | ✱ | △ | |


(1) ✱ △ □ ○ (2) △ ✱ ○ □ (3) ✱ △ ○ □

(05) பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.


(1) குதிரைக் குட்டி தாயுடன் சேர்ந்து ஓடியது. (2) குதிரக் குட்டி தயுடன் சேர்ந்து ஓடியது.

(3) குதிரைக் குட்டி தாயடன் சேர்நது ஓடியது.

(06) 

உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளமும், அகலமும் சமன். இவ்வுருவில்  இம்முறையிலான எத்தனை கட்டங்கள் காணக்கிடைக்கின்றன?

(1) 6 (2) 7 (3) 5

(07) 

இவ்வுருவிற்கேற்ப பின்வரும் எக்கூற்று சரியானது?

(1) சதுரங்களின் எண்ணிக்கையை விட வட்டங்களின் எண்ணிக்கை 2 அதிகமாகும்.

(2) சதுரங்களின் எண்ணிக்கை முக்கோணிகளின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.

(3) முக்கோணிகளினதும் வட்டங்களினதும் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகை 8 ஆகும்.

(08) ○ x ○ = □ □ + □ = △ △ + △ = 36 எனின்

○ + □ + △ இன் பெறுமானம் யாது?

(1) 24 (2) 34 (3) 30

- பின்வரும் கட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு (09) , (10) ஆகிய வினாக்களுக்கான விடைகளை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

| | | | |
|---|---|---|---|
| ● - **பூனை** | ■ - **உங்கள்** | ▲ - **நோய்** | ⊘ - **நாடாது** |
| ☒ - **அடுப்பங்கரையை** |  - **விரைவாக** | ↔ - **குணமாகும்** | ⇨ - **சூடுகண்ட** |

(09) பழமொழியொன்றைக் காட்டும் குறியீட்டு வரிசையைத் தெரிவு செய்க.

(1) ☒ ⇨ ⊘ ● (2) ⇨ ● ☒ ⊘ (3) ● ■ ▲ 

kalvi.lk

(10) நல்ல பிரார்த்தனையைக் காட்டும் குறியீட்டு வரிசையைத் தெரிவு செய்க.



(1) ■ ▲ ✋ ↔ (2) ⇨ ● ↔ ▲ (3) ↔ ■ ☒ ⃠

(11) 5 பிள்ளைகள் வரிசை ஒன்றில் நின்றார்கள். வரிசையில் முதலில் இருந்து 4 ஆவதாக வசந்தி நின்றாள். திவ்யாவில் இருந்து 3 ஆவதாக விமலா நின்றாள். யமுனாவும் மீனாவும் அருகருகே நிற்கவில்லை. இதற்கேற்ப, 3 ஆவதாகவும், 5 ஆவதாகவும் நின்றுகொண்டிருந்த பிள்ளைகளின் பெயர்கள் முறையே,

(1) யமுனா , வசந்தி (2) திவ்யா , விமலா (3) மீனா , விமலா

(12) கீழே தரப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய உருவைத் தெரிவு செய்க



(1)  (2)  (3) 

(13) கீழே தரப்பட்டுள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

2 , 42 , 642 , ......................

(1) 8642 (2) 7642 (3) 2468

(14) இரு பகுதிகளும் சமனாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

(1) ⊕ R ந ண ∇ 5 க = ⊗ R ந ண ∆ 5 க (2) 6 ᗺ ம S ↱ ◎ 3 = 6 ᗺ ம S ↱ ◎ 3

(3) ⧅ வ 9 w ⌓ M ல = ⊠ வ ℓ W ⌓ M ග

● கூடுகளில் இலக்கங்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதற்கேற்ப,

| | | | |
|---|---|---|---|
| 5 | 10 | A | 40 |
| 2 | | | 16 |
| | 20 | 25 | B |
| 6 | 8 | 10 | |

(15) எழுத்து A எழுதப்பட்டுள்ள கூட்டிற்குப் பொருத்தமான எண்,

(1) 35 (2) 30 (3) 45


(16) எழுத்து B எழுதப்பட்டுள்ள கூட்டிற்குப் பொருத்தமான எண்,

(1) 12 (2) 13 (3) 14

(17) ரூ. 574.26 ஐக் குறியீடுகளில் Rs. MPD.RA எனக் காட்டலாம் எனின், ரூ. 2764.56 ஐ எவ்வாறு காட்டலாம்?

(1) Rs. PRDM.AD (2) Rs. RPAD.MA (3) Rs. RADP.AM

● தரப்பட்டுள்ள உருவில் கிரிக்கெட் விளையாட்டை விரும்பும் பிள்ளைகள் முக்கோணியினாலும், வொலிபோல் விளையாட்டை விரும்பும் பிள்ளைகள் வட்டத்தினாலும், காற்பந்து விளையாட்டை விரும்பும் பிள்ளைகள் செவ்வகத்தினாலும் காட்டப்பட்டுள்ளனர்.





இவ்வுருவிற்கேற்ப, இலக்கம் (18), (19) ஆகிய வினாக்களுக்குரிய மிகச் சரியான விடைகளின் கீழ்க் கோடிடுக.




(18) கிரிக்கெட், வொலிபோல், காற்பந்து ஆகிய மூன்றையும் விரும்பும் பிள்ளைகளின் பெயர்கள்,


(1) நளன் , நாதன் (2) வாசு , வசீம் (3) பாலா , மோகன்

(19) வொலிபோல் , காற்பந்து ஆகிய இரண்டை மாத்திரம் விரும்பும் பிள்ளைகளின் பெயர்கள்,

(1) ரஞ்சித் , சுனில் (2) வாசு , வசீம் (3) நளன் , நாதன்

(20) பின்வரும் எந்தப் பொருட் சோடியை மேலிருந்து பார்க்கும்போது  எனத் தோன்றும்?

(1)  (2)  (3) 

(21)  இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவில்,

(1) $\frac{1}{2}$ ஐ விட அதிகம் (2) $\frac{1}{2}$ ஐ விட குறைவு (3) $\frac{1}{2}$ யிற்குச் சமன்

kalvi.lk

சுட்டெண்:-.......................................

● ஒரு நாளில் பிள்ளையொன்று காலையில் ஒவ்வொரு செயலும் தொடங்கிய நேரங்கள் கீழேயுள்ள கடிகார முகங்களில் காட்டப்பட்டுள்ளன.




ஒரு செயல் முடிவடைந்தவுடன் பிள்ளையின் அடுத்த செயல் ஆரம்பமாகும். பிள்ளை மு.ப 11.20 க்கு வேலைகளை செய்து முடித்தது. மேலேயுள்ள தகவல்களுக்கேற்ப இலக்கம் (22) , (23) ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.

(22) பிள்ளை செய்த வேலைகளை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) விளையாடுதல் - படித்தல் - முற்றத்தைக் கூட்டுதல் - உறங்குதல்
(2) படித்தல் - விளையாடுதல் - உறங்குதல் - முற்றத்தைக் கூட்டுதல்
(3) உறங்குதல் - விளையாடுதல் - முற்றத்தைக் கூட்டுதல் - படித்தல்


(23) பிள்ளை கூடிய நேரம் செய்த வேலையையும், குறைந்த நேரம் செய்த வேலையையும் ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) படித்தல் - முற்றத்தைக் கூட்டுதல்  (2) உறங்குதல் - விளையாடுதல்  (3) விளையாடுதல் - படித்தல்

(24) நீளம், அகலம், உயரம் ஆகியன 6cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியில் இருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 2cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 8  (2) 18  (3) 27

(25)




மூன்று பிள்ளைகள் உருவில் காட்டப்பட்டுள்ள முறைக்கேற்ப முற்றத்தில் ஒரு கோலத்தில் கோடுகளை வரைந்துள்ளனர். அதன்பின் வசீம் O விலிருந்து P வரையும், இக்பால் O விலிருந்து Q வரையும், சிவகுமார் O விலிருந்து R வரையும் அம்புக்குறிகள் காட்டும் திசைகளில் கோடுகளின் வழியே பயணம் செய்தனர். ஒவ்வொரு பிள்ளையும் பயணம் செய்த தூரத்திற்கேற்ப, மிகக் குறைந்த தூரத்தில் இருந்து மிகக் கூடிய தூரம் வரை பயணித்த ஒவ்வொரு பிள்ளையினதும் பெயரையும் ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) வசீம் , சிவகுமார் , இக்பால்  (2) சிவகுமார் , வசீம் , இக்பால்

(3) இக்பால் , வசீம் , சிவகுமார்

(26) A பாத்திரத்தில் 8 பந்துகளும், B பாத்திரத்தில் 14 பந்துகளும் உள்ளன. பிள்ளையொன்று A பாத்திரத்திலுள்ள பந்துகளின் எண்ணிக்கையின் அரைவாசியை B பாத்திரத்திற்கும், B பாத்திரத்திலுள்ள பந்துகளின் எண்ணிக்கையின் அரைவாசியை A பாத்திரத்திற்கும் இட்டது. அதன்படி தற்போது,

(1) A பாத்திரத்தை விட B பாத்திரத்திலுள்ள பந்துகளின் எண்ணிக்கை அதிகமாகும்.
(2) A, B ஆகிய பாத்திரங்களிலுள்ள பந்துகளின் எண்ணிக்கை சமனாகும்.
(3) A பாத்திரத்தை விட B பாத்திரத்திலுள்ள பந்துகளின் எண்ணிக்கை குறைவாகும்.


(27) தற்போது ரோகினியின் வயது 6 ஆகும். தற்போது ரோகினியின் வயது நிஹாராவின் வயதைப்போல மூன்று மடங்காகும். ரோகினியின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் நிஹாராவின் வயதின் இரு மடங்காக இருக்கும்?

(1) 3  (2) 4  (3) 2

(28) 2019 ஆம் ஆண்டில் 365 நாட்களும், 2020 ஆம் ஆண்டில் 366 நாட்களும் உள்ளன. 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இதற்கேற்ப 2021 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி,

(1) வெள்ளிக்கிழமை  (2) சனிக்கிழமை  (3) ஞாயிற்றுக்கிழமை

(29) உடைந்த முக்கோண வடிவ கண்ணாடியொன்றின் சில கண்ணாடித் துண்டுகள் பின்வரும் உருக்களில் காணப்படுகின்றன.




முக்கோண வடிவ கண்ணாடியை மீண்டும் ஆக்குவதற்குப் பொருத்த வேண்டிய மூன்று துண்டுகள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) 4 , 1 , 6  (2) 5 , 4 , 3  (3) 2 , 1 , 4

kalvi.lk

(30) ஒரு வீதியில் இரு சிவப்பு நிறக் கொடிகளுக்கு நடுவில் நீல நிற, பச்சை நிறக் கொடிகள் ஒன்று வீதம் நடப்பட்டுள்ளன. வீதியில் சிவப்பு நிறக் கொடிகள் 12 நடப்பட்டுள்ளன எனின், வீதியில் நடப்பட்டுள்ள மொத்தக் கொடிகளின் எண்ணிக்கை.

(1) 36 (2) 34 (3) 32

(31) குறித்த வருடமொன்றின் பெப்ரவரி மாதத்தில் 5 புதன்கிழமைகள் இருந்தது. அவ்வருடமாக இருக்கக்கூடியது,

(1) 2021 (2) 2019 (3) 2016

(32) தரப்பட்டுள்ள வாக்கியங்களிடையே மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) காலை ஒரு மணி நேரத்தின் பின் தேநீரைப் பருகவும் உணவை உண்டு.


(2) காலை உணவை உண்டு ஒரு மணி நேரத்தின் பின் தேநீரைப் பருகவும்.

(3) உணவை உண்டு பின் தேநீரைப் பருகவும் காலை ஒரு மணி நேரத்தின் பின்.

(33) ஒரு கம்பி மூன்று சம பகுதிகளாக வெட்டப்பட்டு, அவற்றில் ஒரு பகுதி மறுபடியும் நான்கு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. அக்கம்பித் துண்டுகளின் ஒன்றின் நீளம் 2 மீற்றர் எனின், தொடக்கத்தில் இருந்த கம்பியின் நீளம்,

(1) 24 மீற்றர் (2) 48 மீற்றர் (3) 36 மீற்றர்

(34)




P, Q எனும் நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 12 கிலோமீற்றர் ஆகும். வாகனமொன்று P யிலிருந்து அம்புக்குறி காட்டும் திசைக்கு 1 கிலோமீற்றர் பயணிக்கும்போது மற்றொரு வாகனமொன்று Q யிலிருந்து அம்புக்குறி காட்டும் திசைக்கு 2 கிலோமீற்றர் பயணிக்கும். இரு வாகனங்களும் ஒரே நேரத்தில் பயணத்தை ஆரம்பித்தது எனின், இரு வாகனங்களும் சந்திக்கும் இடம்,

(1) D (2) F (3) E

(35) கீழே தரப்பட்டுள்ள பாடலிலுள்ள A, B ஆகிய வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.

சின்னச் சின்னத் தேனீ
.....A..... இல்லாத தேனீ
உன்னைப் போல நானும்
.....B..... வலம் வரவேணும்

(1) A = திறமை, B = வானத்தை
(2) A = சிறகு, B = வீட்டை
(3) A = சிறுமை, B = உலகை

(36) ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத சொல் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

(1) அலை - உப்பு - கடல் (2) தேனீ - எண்ணெய் - மண் (3) நிழல் - சூரியன் - ஒளி


(37) சதுர வடிவமான காணியொன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 18 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித் தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை,

(1) 28 (2) 32 (3) 24

(38) ஒரு நிரையில் சுனில் தொடக்கத்திலிருந்து 9 ஆவதாக நிற்கின்றான். அவன் கடைசியிலிருந்து 11 ஆவதாக நிற்கின்றான். அந்நிரையில் அனில் தொடக்கத்திலிருந்து 4 ஆவதாக நின்றால், அவனுக்குப் பின்னால் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

(1) 14 (2) 15 (3) 16

(39)





எண்கள் அமைந்துள்ள விதத்தைப் பார்த்து சரியான விடையைத் தெரிவு செய்க.

இக்கோலத்தில் A, B ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்கள் முறையே,

(1) A = 16, B = 10 (2) A = 14, B = 8 (3) A = 18, B = 11

(40)




அருகே A, B ஆகிய தொகுதிகளில் ஒரேயளவான பருமனையுடைய 3 பெரிய பாத்திரங்களும், ஒரேயளவான பருமனையுடைய 2 சிறிய பாத்திரங்களும் உள்ளன. பெரிய பாத்திரத்தின் பருமன் சிறிய பாத்திரத்தின் பருமனைப்போல இரு மடங்காகும். உருவில் காட்டப்பட்ட முறைக்கேற்ப, 5 பாத்திரங்களிலும் அரிசி முழுமையாக நிரப்பப்பட்டுள்ளது. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) A தொகுதியை விட B தொகுதியில் அதிகமாக அரிசி உள்ளது.

(2) B தொகுதியை விட A தொகுதியில் அதிகமாக அரிசி உள்ளது.

(3) இரு தொகுதிகளிலும் உள்ள அரிசியின் அளவு சமனாகும்.

Education
kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-04

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
* **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

ஆரம்பகாலத்தில் மனிதன் முரசு, தீ போன்றவற்றைப் பயன்படுத்தித் தொலைவில் உள்ளவர்களுக்குப் பல தகவல்களை அனுப்பினான். பின் புறா மூலம் தகவல்களைப் பரிமாறினான். அதன்பின் கடிதம், தொலைபேசி ஆகியவற்றின் வழியாகத் தொடர்பு கொண்டான். இவ்வாறாக இன்று நம் வாழ்வோடு கணினியும் இணைந்து விட்டது. ஒரு மனிதனுக்குக் கல்வி அறிவு எவ்வளவு முக்கியமோ அதே போன்றே கணினி அறிவும் அவசியமாகிவிட்டது. கணினியின் வருகையால் மனிதர்களுடைய வேலைச்சுமை குறைக்கப்படுகின்றது. அத்தோடு பலர் சேர்ந்து செய்யும் வேலைகளை கணினி மிக விரைவாக செய்கின்றது.

(i) ஆரம்பகாலத்தில் மனிதன் தகவல்களை அனுப்புவதற்கு எவற்றை பயன்படுத்தினான்? ..........................................

(ii) இன்று நம் வாழ்வோடு இணைந்து காணப்படுவது எது? ..........................................

(iii) தற்காலத்தில் நாம் தகவல்களை அனுப்புவதற்கு பயன்படுத்தப்படும் மூன்று முறைகளை எழுதுக. ..........................................

(iv) இன்றைய காலத்தில் கல்வி அறிவை தவிர வேறு எந்த அறிவைப் பெற வேண்டும்? ..........................................

(v) அஃறிணை ஒருமை படர்க்கை பெயர்ச்சொல் ஒன்றை பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக. ..........................................

**(02) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நிறுத்தக்குறியினதும் பெயரை எழுதுக.**

(i) ! :- .......................................... (ii) “ ” :- ..........................................

**(03) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுவாயை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) .............................. ( நான், நாங்கள், நீங்கள் ) நாளை சுற்றுலாச் செல்லவிருக்கின்றோம்.

(ii) .............................. ( அது, அவர்கள், அவை ) கூட்டமாகப் பறந்துச் செல்கின்றன.

(iii) .............................. ( நீயும், அவனும், நானும் ) என்னுடன் வருவாயா?

(iv) .............................. ( நீங்களே, நீயே, நாங்களே ) அந்த வேலையைச் செய்திருப்பாய்?

**(04) கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.**

நாங்கள் சந்தைக்குச் செல்வோம் :- ..........................................

**(05) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் அறிவித்தலாயின் ( ✓ ) எனவும், அறிவுறுத்தலாயின் ( X ) எனவும், கட்டளையாயின் ( 0 ) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக.**

(i) கணிதம், சுற்றாடல் புத்தகங்களை வலதுப் பக்கத்திலுள்ள இறாக்கையில் வையுங்கள். ( )

(ii) உங்கள் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தை வலதுப் பக்கத்தின் மேலுள்ள கூட்டினுள் எழுதுக. ( )

(iii) தயவுசெய்து இவ்விடத்தில் குப்பைகளை இட வேண்டாம். ( )

**(06) பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக எழுதுக.**

* நேற்று நான் மழையில் நனைந்தேன். * இன்று எனக்கு காய்ச்சல் ஏற்பட்டது.

..........................................................................................

**(07) பிராணிகளுக்கான ஆண், பெண் மரபுப் பெயர்களைக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| மயில் | (i) .............................. | அளகு |
| யானை | களிறு | (ii) .............................. |

**(08) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.**

(i) இ. பெ. கூ :- ..........................................

(ii) இ. ரூ. கூ :- ..........................................

kalvi.tk

**(09) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான மரபுத் தொடரை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

( அண்டப்புழுகன்,  கைகொடுத்தல்,  அலைக்களித்தல் )

(i) நாம் எவரையும் ............................................................ கூடாது.  (ii) அவனை ...................................................................... என்று கூறுவர்.

(iii) துன்பப்படுவோருக்குக் ........................................................................ வேண்டும்.

**(10) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) Please give me a .......... ( pen / pens )  (ii) Where .......... ( is / are ) you going?

**(11) பின்வரும் வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

இது எனது வீடு :- ..........................................................................................................................

**(12) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்திலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைக் கூட்டினுள் இருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

| post office , sea , sky , hospital , bank , pharmacy |
|---|

(i) We can buy medicine from the ..........................................................................


(ii) A ship sails in the ..........................................................  (iii) A doctor works in a .......................................................

**(13) "குருவரயா ( ගුරුවරයා )" என்ற சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.** ....................................................................

**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**

எனக்கு அப்பம் வேண்டாம் :- ...................................................................................................

(15) 2072, 3001, 2702, 3901, 2027 என்னும் எண்களை சிறிய எண்ணிலிருந்து பெரிய எண் வரையான ஒழுங்கில் (ஏறுவரிசையில்) எழுதுக. ..........................................................................................................................

(16) 

இக்கார்ட்போர்ட் அட்டைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளப்பட்ட திண்மத்திலுள்ள விளிம்புகளின் எண்ணிக்கை, திண்மத்திலுள்ள முகங்களின் எண்ணிக்கையின் எத்தனை மடங்காகும்? ...............................................................................................


(17) 


இக்கடிகார முகத்தினால் காட்டப்பட்டுள்ள நேரத்தின்படி, 8 கழிந்து 20 நிமிடங்கள் ஆவதற்கு இன்னும் எத்தனை நிமிடங்கள் உள்ளன? ...............................................................................................

(18) VII, X ஆகிய உரோம எண்குறிகளை ஆக்குவதற்கு ஒரேயளவான நீளமுள்ள 6 ஈர்க்குத் துண்டுகள் தேவைப்படும். அதன்படி, 9, 4 ஆகிய எண்களை உரோம எண்குறிகளில் ஆக்குவதற்குத் தேவைப்படும் ஒரேயளவான நீளமுள்ள ஈர்க்குத் துண்டுகளின் மொத்த எண்ணிக்கை யாது? ...............................................................................................

(19) என்னிடம் ரூபாய் 270.00 உள்ளது. ஒன்று ரூபாய் 40.00 வீதம் 8 மாம்பழங்களை வாங்குவதற்கு இன்னும் தேவையான பணம் எவ்வளவு? ...............................................................................................

(20) அதிக சமச்சீர்க் கோடுகள் உடையது செவ்வகத்திற்கா? வட்டத்திற்கா? சதுரத்திற்கா? ...............................................................

(21) 


பிள்ளையொன்று வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற திசைகளை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, அப்பிள்ளை பாடசாலையிலிருந்து வீட்டிற்குச் சென்ற திசைகளை ஒழுங்குமுறையில் எழுதுக. ...............................................................................................

(22) அனில் நின்றுகொண்டிருப்பது கமலிற்கு 4m 60cm கிழக்குத் திசையில் ஆகும். சுரேஷ் நின்றுகொண்டிருப்பது கமலிற்கு 3m 80cm மேற்குத் திசையில் ஆகும். அதன்படி, அனில் நின்றுகொண்டிருப்பது சுரேஷிற்கு எவ்வளவு தூரத்திலாகும்?.............

(23) ரூபாய் 100.00 பணத்தை 3 நாணயத் தாள்களாகவும், ஒரு நாணயக் குற்றியாகவும் செலுத்தத்தக்க விதத்தை எழுதுக.

..........................................................................................................................


(24) பொது வித்தியாசம் 7 ஆகவுள்ள எண் கோலமொன்றை எழுதுக. ...............................................................................

(25) சிவாவின் நிறை 34kg 700g ஆகும். ஆசிமின் நிறை 24kg 600g ஆகும். அதன்படி, இரு பிள்ளைகளினதும் மொத்த நிறை யாது? ...............................................................................................


(26) பெட்டியொன்றில் உள்ள மொத்த முட்டைகளின் எண்ணிக்கை 16 ஆகும். அதில் $\frac{3}{4}$ சிவப்பு முட்டைகள் ஆகும். அதன்படி, பெட்டியிலுள்ள வெள்ளை முட்டைகளின் எண்ணிக்கை யாது? ...............................................................................................

kalvi.lk

சுட்டெண்:-.........................................

(27) 

இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? ..............................................................

(28) 


உருவில் உரோம எண்குறிகள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்று வட்டத்திற்குப் பொருத்தமான உரோம எண்குறியை வெற்று வட்டத்தினுள்ளேயே எழுதுக.

(29) பெட்டியொன்றினுள் ஒவ்வொரு நிறத்திலும் உள்ள பென்சில்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்களை மாணவன் ஒருவன் அட்டவணை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தான்.

| | பென்சில்களின் எண்ணிக்கை |
|---|---|
| கறுப்பு பென்சில்கள் | ///// ///// ///// // |
| சிவப்பு பென்சில்கள் | ///// ///// /// |
| மஞ்சள் பென்சில்கள் | ///// ///// ///// //// |

(i) பெட்டியினுள் உள்ள மொத்த பென்சில்களின் எண்ணிக்கை யாது? ..............................................................

(ii) சிவப்பு பென்சில்களின் எண்ணிக்கையை விட அதிகமாக உள்ள மஞ்சள் பென்சில்களின் எண்ணிக்கை யாது? ............

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) இலங்கையில் ஒன்றுக்கொன்று மிகக் கூடிய தூரத்தில் அமைந்துள்ள இரு இடங்கள்,
(1) கொழும்பு - நுவரெலியா (2) தேவேந்திரமுனை - பருத்தித்துறைமுனை (3) கொழும்பு - திருகோணமலை

(31) தினமும் மிகக் குறைவான அளவு நீர் அருந்துவதால் ஏற்படும் பாதிப்பு **அல்லாதது**,
(1) சிறுநீரகங்களில் அடிக்கடி கிருமித்தாக்கம் ஏற்படல். (2) சிறுநீரகக் கற்கள் தோன்றுதல்.
(3) சிறுநீர் வெள்ளை நிறமாதல்.

(32) தேனீ, வண்ணத்துப்பூச்சி, குளவி ஆகிய பிராணிகள்,
(1) சிறிய பூச்சிகளைப் பிடித்து உண்ணும். (2) தாவர மகரந்தச் சேர்க்கைக்கு உதவும்.
(3) சூழலில் உள்ள குப்பைக் கூளங்களை உக்கச் செய்யும்.

(33) "ஆமடில்லா" எதிரிகளிடமிருந்து தப்புவதற்காக வெளிக்காட்டும் உத்தி,
(1) உடலை வளையமாகச் சுருட்டுதல். (2) ஓட்டினுள் மறைதல். (3) உடலைப் பந்துபோலச் சுருட்டுதல்.

(34) பல்லி தொடர்பான கூற்றுக்களில் **பிழையான** கூற்று,
(1) தமது பாதுகாப்புக்காக வாலை உடைத்து விட்டு ஓடும்.
(2) சூழலுக்கு ஏற்ப தனது உடலின் நிறத்தை மாற்றும். (3) மேற்பரப்பில் ஒட்டி இருப்பதற்கு விசேட பாதங்கள் இருத்தல்.

(35) எலிகளைப் பிடித்து உண்ணும் பறவை,
(1) ஆந்தை (2) செண்பகம் (3) அன்னம்

(36) மரப்பொந்துகளில் வாழ்விடம் அமைத்து முட்டையிட்டு குஞ்சு பொரிப்பவை,
(1) காகம், தூக்கணாங்குருவி (2) மரங்கொத்தி, ஆந்தை (3) வாத்து, மயில்

(37) மரங்களை நடுவதன் மூலம்,
(1) மண்ணரிப்பு அதிகரிக்கும். (2) வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும் (3) சுத்தமான வளி கிடைக்கும்

(38) இலைகள் **இல்லாத** தாவரங்கள்,
(1) ஆலமரம், கறுவா (2) நாகதாளி, கற்றாளை (3) தேக்கு, குப்பைமேனி

(39) கணினி மூலம் இணையத்துடன் இணைப்பதில் உள்ள **பிரதிகூலம்**,
(1) தேவையான தகவல்களை எந்த நேரத்திலும் தேடிப் பெறலாம். (2) தகவல்களை மிக விரைவாகப் பெறலாம்.
(3) தேவையேதுமின்றிப் பயன்படுத்துவதால் நேரம் வீணாதல்.

(40) ஊரில் நடைபெறும் திடீர் அனர்த்தம் ஒன்று தொடர்பாக ஊர் மக்களுக்கு தெரியப்படுத்த மிகப் பொருத்தமான சாதனம்,
(1) ஒலிபெருக்கி (2) சுவரொட்டி (3) தொலைபேசி

(41) தேசப்படங்களில் ஆறுகள், குளங்கள் என்பவற்றை குறிக்க பயன்படும் நிறம்,
(1) பச்சை (2) நீலம் (3) மஞ்சள்

(42) பல்லாக்கு என்பது,
(1) முற்காலத்தில் மன்னர்கள் பயணம் செய்ய பயன்படுத்திய வாகனம்.
(2) முற்காலத்தில் பாலைவனப் பிரதேச மக்கள் பயன்படுத்திய வாகனம்.
(3) முற்காலத்தில் வெளிநாடுகளுக்கு விரைவாகப் பயணம் செய்ய உதவும் வாகனம்.

(43) வாகனமொன்றில் ஒளிரும் விளக்குகள் தொடர்பான **பிழையான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) வாகனம் பின்னோக்கி நகரும்போது வெள்ளை நிற விளக்குகள் ஒளிரும்.
(2) இடதுப் பக்கமாகவோ வலதுப் பக்கமாகவோ வாகனத்தைத் திருப்பும்போது மஞ்சள் நிற விளக்குகள் ஒளிரும்.
(3) வாகனத்தை நிறுத்தும்போது பச்சை நிற விளக்குகள் ஒளிரும்.


kalvi.lk

(44) சாரதிகள் வாகனத்தைச் செலுத்தும்போது கடைபிடிக்க வேண்டிய வீதி ஒழுங்கு,

(1) சாரதிகள் வீதியில் வலது புறமாக வாகனத்தை ஓட்ட வேண்டும்.

(2) பாதசாரிகள் கடவையைக் கவனித்து குறைந்த வேகத்தில் வாகனத்தை ஓட்ட வேண்டும்.

(3) தொலைபேசியில் உரையாடியவாறு வாகனத்தை ஓட்ட வேண்டும்.

(45) 

இரு மின்சூள் மின்குமிழ்கள் உலர்கலமொன்றில் செப்புக் கம்பிகளினால் இணைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. இவ்வுருவிற்கேற்ப, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் **பிழையான** கூற்றைத் தெரிவு செய்க.

(1) A மின்குமிழ் ஒளிரும், B மின்குமிழ் ஒளிராது. (2) A மின்குமிழ் ஒளிராது, B மின்குமிழ் ஒளிரும்.

(3) A, B ஆகிய இரு மின்குமிழ்களும் ஒளிரும்.

(46) புற்று நோயைத் தடுக்கக்கூடிய வழிமுறைகளில் ஒன்று,

(1) தினமும் உடற்பயிற்சி செய்தல். (2) தினமும் செயற்கையான உணவுகளை உண்ணல்.

(3) தினமும் மிகக் குறைவாக நீர் அருந்துதல்.

(47) சிறந்த பிரார்த்தனை **ஒன்றல்லாதது,**

(1) நோய் விரைவில் குணமாகட்டும். (2) மிக வேகமாகப் பயணிக்கும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகட்டும்.

(3) நீங்கள் பரீட்சையில் மிக உயரிய சித்தியைப் பெறுக.

(48) கிளைகளற்ற தாவரங்கள்,

(1) வேம்பு, கொய்யா (2) பனை, கித்துள் (3) கத்தாப்பு, றம்புட்டான்

(49) நீரில் முட்டையிடும் பிராணிகள்,

(1) தவளை, நுளம்பு (2) குளவி, தேனீ (3) நத்தை, ஆமை

(50) நாற்று மேடைகளிலிருந்து நாற்றுக்கள் பெறப்பட்டுப் பாத்திகளில் நடப்படுகின்ற பயிர் வகைகள்,

(1) வெண்டி, குரக்கன் (2) பயறு, கௌபி (3) கத்தரி, தக்காளி

(51) இலங்கைக்கு ஒலிம்பிக் பதக்கங்களை வென்ற வீரர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) சுசந்திகா ஜயசிங்க, தமயந்தி தர்ஷா (2) டங்கன் வைட், சுசந்திகா ஜயசிங்க (3) சுசந்திகா ஜயசிங்க, டங்கன் வைட்

(52) தனிப்பட்ட வகையில் ஒருவர் பயன்படுத்த வேண்டிய பொருட்கள்,

(1) பற்தூரிகை, சீப்பு (2) குடை, பேனை (3) தொலைபேசி, முகம் பார்க்கும் கண்ணாடி

(53) நீல நிறப் பின்னணியுடன் காணப்படும் வீதிச் சமிக்ஞை **அல்லாதது,**

(1)  (2)  (3) 

(54) சூரிய நமஸ்கார பயிற்சியில் 3 ஆவது கட்டத்தைக் காட்டும் உரு,

(1)  (2)  (3) 

(55) பயிர்களைச் சேதப்படுத்தும் விலங்கினங்கள்,

(1) தும்பி, மண்புழு (2) அந்து, இராமபாணம் (3) நெல்தண்டுக்கோதி, மீலி முட்டைப்பூச்சி

(56) காணாமல் போன அடையாள அட்டை பற்றிய அறிக்கையைப் பதிவு செய்ய நாம் செல்ல வேண்டியது,

(1) தபால் அலுவலகத்திற்கு (2) பொலிஸ் நிலையத்திற்கு (3) கிராம சேவகர் அலுவலகத்திற்கு

(57) அருகருகே அமைந்துள்ள 2 மாகாணங்கள்,

(1) மேல் மாகாணம், தென் மாகாணம் (2) கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம் (3) வட மாகாணம், மத்திய மாகாணம்

(58) தேசியக் கொடியைப் பற்றிய **பிழையான** கூற்று,

(1) தேசியக் கொடியின் நீளம் அதன் அகலத்தைப் போல இரு மடங்காகும்.

(2) தேசிய துக்க தினக் கொண்டாட்டத்தின்போது தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும்.

(3) சுதந்திர தின விழாவின்போது மற்றைய கொடிகளை விட குறைந்த உயரத்தில் தேசியக் கொடி பறக்க விடப்படும்.

(59) பிறப்புச் சான்றிதழைப் பெற நாம் செல்ல வேண்டியது,

(1) சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு (2) பிரதேச சபை அலுவலகத்திற்கு

(3) பிறப்பு, இறப்பு, திருமண பதிவு அலுவலகத்திற்கு

**(60) "எனக்குப் பெறுமதி வாய்ந்த இரத்தினக்கல் ஒன்று கிடைத்தால்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. நீங்கள் இரத்தினக்கல்லைப் பெருந்தொகைக்கு விற்று அந்தப் பணத்தினால் செய்ய எதிர்பார்ப்பவற்றையும் இங்கு குறிப்பிடுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

kalvi.lk

(3) ..........................................................................................................................................